

சேப்பாக்கம் பகுதி திமுக சார்பில் 114வது வட்டத்தில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நலதிட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. வழங்கினார். அருகில் மேற்கு மாவட்ட செயலாளர் சிற்றரசு, மண்டல குழு தலைவர் எஸ்.மதன்மோகன், வட்ட கழக செயலாளர் தமீம் அன்சாரி மற்றும் கழகத் தோழர்கள் உடனிருந்தனர்.



பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திரிசூலம் ஊராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் திரிசூலம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மெட்ராஸ் மெட்ரோ ரவுண்ட் டேபிள் 95 தனியார் நிறுவனத்தின் பங்களிப்புடன் 23.80 லட்சம் மதிப்பீட்டில் 2 புதிய வகுப்பறை கட்டிடங்கள் கட்டப்பட்டன. அக்கட்டிடங்களை மாவட்ட ஆட்சியர் ஏ.ஆர்.ராகுல்நாத் தலைமையில் கழகப் பொருளாளரும், தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவருமான டி.ஆர்.பாலு அவர்களும் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சரும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகச் செயலாளருமான தா.மோ. அன்பரசன் ஆகியோர் திறந்து வைத்தனர். பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, ஒன்றிய கழகச் செயலாளர் விவேகானந்தர் (எ)ரவி, முதன்மை கல்வி அலுவலர் சுகானந்தம், மாணவ, மாணவிகள், பெற்றோர், ஆசிரியர், கழகத்தினர் உடன் இருந்தனர்.

### மாநில பேரிடர் தணிப்பு நிதியின் ஒதுக்கீட்டில் 50 விழுக்காட்டுக்கு மேல் செலவிட

# ஒன்றிய அரசின் அனுமதி பெற வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்திடுவீர்!

### புதுடெல்லியில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் - அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஜூன் 15 -

தமிழ்நாடு அரசின் சார்பில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் நேற்று முன்தினம் (13.06.2023), புதுடில்லியில் ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா தலைமையில் நடைபெற்ற பேரிடர் மேலாண்மை குறித்து அனைத்து மாநில பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்கள் ஆய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு :-

தென்மேற்குப் பருவ மழைக் காலத்தில் ஏற்படக் கூடிய பேரிடர்களை எதிர்கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய தயார் நிலை குறித்தும், இதர முக்கியமான பொருட்கள் குறித்தும் விவாதிக்கப்படும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

சமீப காலங்களில், பேரிடர்கள் அடிக்கடி ஏற்படுவதும், அவற்றின் தாக்கம் மிகக் கூடுதலாக இருப்பதும், பேரிடர் நிர்வாக அமைப்புகள், எக்காலத்திலும் தயார்நிலையில் இருக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதும், ஒரு புதிய இயல்பு நிலையாக உள்ளது.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், தென்மேற்குப் பருவ மழைக்காலத்தில், வெள்ளம், கன மழை அதனால் பயிர் சேதங்கள், ஆறுகள் / கால்வாய் உடைப்புகள், இடி மின்னலுடன் ஏற்படும் கன மழை, உயிர் சேதங்கள், நிலச்சரிவுகள் ஏற்பட்டன. இக்காலத்தில் மழைப் பற்றாக்குறை ஏற்பட்டு அதனால் குடிநீர் விநியோகம் பாதிப்பு மற்றும் வறட்சியால் பயிர் சேதங்கள் ஏற்பட்டதும் உண்டு.

நான் விவரித்த பாதிப்புகளிலிருந்து மக்களை எவ்வாறு பாதுகாப்பது, இச்சூழ்நிலைகளை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் இயங்கும் தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையமும், அரசு தலைமைச் செயலாளரின் தலைமையில் இயங்கும் மாநில செயலாக்க குழுவும், மாநில நிவாரண ஆணையரின் தலைமையில் இயங்கும் வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையும், மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் இயங்கும் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையமும் சிறப்பான முறையில் தயார் நிலையில் உள்ளன. பேரிடர்களை திறம்பட எதிர்கொள்ள உள்துறை அமைச்சகத்தோடும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தோடும் தொடர்பு கொண்டு அனைத்து வழிகாட்டுதல்களையும் பின்பற்றி வருகிறோம். தென்மேற்கு பருவமழைக் காலத்தில் ஆயத்த நிலை குறித்து கேட்கப்பட்ட 14 விபரங்கள் தமிழ்நாடு அரசால் அளிக்கப்பட்டுள்ளது. இந்த நல்வாய்ப்பினை பயன்படுத்தி பின்வரும் கோரிக்கைகளை இம்மா மன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

**தொழில் நுட்ப வழிகாட்டுதல்கள்!**

15வது நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட தேசிய பேரிடர் தணிப்பு நிதி, மாநில பேரிடர் தணிப்பு நிதி பயன்பாட்டுக்கான தொழில்நுட்ப வழிகாட்டுதல்கள் விரைவில் வழங்கப்பட வேண்டும்.

பேரிடர் மேலாண்மையில் முழுப்பொறுப்பும் மாநில அரசை சார்ந்ததாக இருக்கும் போது திட்டச் செயல்பாட்டு வழிமுறைகள், மாநிலத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக இருக்க வேண்டுமே அன்றி இதனை முடக்குவதாக இருக்கக் கூடாது.

பேரிடர் தணிப்புப் பணிகளுக்கு மாநில பேரிடர் தணிப்பு நிதியை முழுவதுமாக பயன்படுத்திய பின்னர் தான் மாநிலத்தின் பேரிடர் தணிப்புப் பணிகளுக்கு தேவையான தொகை தேசிய பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து கிடைக்கப்பெறும் என்ற நிலை மாற்றப்பட்டு மாநில அரசு, திட்டங்க ளுக்கு ஒப்புதல் வழங்கிய நிலையிலேயே மத்திய ஒதுக்கீடு வழங்குவது பரிசீலிக்கப்பட்டு திட்ட ஒப்புதலும் நிதி ஒதுக்கீடும் வழங்கப்பட வேண்டும்.

சிறப்புத் திட்டங்களான வறட்சி தணிப்பு திட்டம், இடி மின்னல் பாதிப்பு தணிப்புத் திட்டம், தீயணைப்புத் துறை நவீனப்படுத்தும் திட்டம் ஆகியவற்றுக்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு, திட்டப் பணிகள் விரைவில் மேற்கொள்ளும் வகையில் திட்ட முன்மொழிவுகள் பெறப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

மாநில பேரிடர் நிவாரண நிதித் தொகுப்பில் விதிக்கப்பட்டுள்ள வரன் முறைகள் மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் மாநில பேரிடர் தணிப்பு நிதியின் நிதியளிப்பு இனங்கள் ஒன்றுக்கொன்று மாறக்கூடியவை அல்ல என்றாலும், அந்தந்த நிதிகளின் துணைச் சாளரங்களுக்குள் நெகிழ்வுத்தன்மை மற்றும் மறு ஒதுக்கீடு செய்யப்படலாம். அத்தகைய மறு ஒதுக்கீடு அந்த துணை சாளரத்தின் ஒதுக்கப்பட்ட மொத்த தொகையில் 10 சதவீதத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை தளர்த்தப்பட வேண்டும்.

ஒரு நிதி ஆண்டில் குறிப்பிட்ட ஒரு பேரிடருக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து 50 விழுக்காடு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், மாநில அரசின் எழுத்துப்பூர்வமான கோரிக்கையின் அடிப்படையில் தேசிய செயற்குழுவின் துணைக் குழுவின் பரிந்துரையின் பேரில் இந்த நிபந்தனையை உள்துறை அமைச்சகம் தளர்த்தலாம். தமிழ்நாடு, பல்வேறு பேரிடர்களின் காரணமாக பெரிதும் பாதிப்பிற்குள்ளாவதால் மாநில பேரிடர் தணிப்பு நிதியிலிருந்து ஒரு நிதியாண்டில் ஒரு குறிப்பிட்ட பேரிடருக்கு மாநில பேரிடர் தணிப்பு நிதியின் மொத்த ஒதுக்கீட்டில் 50 விழுக்காட்டுக்கு மேல் செலவிட இந்திய அரசின் அனுமதி பெற வேண்டும் என்ற நிபந்தனையை தளர்த்திட வேண்டும்.

மாநில பேரிடர் நிவாரண நிதியின் நான்கு பிரிவுகளின் ஒரு பிரிவான சீரமைப்பிற்காக குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், சீரமைப்பு பணிகளுக்காக நிதி தேவைப்படும் நேர்வுகளில் மாநில பேரிடர் நிவாரண நிதியின் இதர பிரிவு களான மீட்பு மற்றும் நிவாரணம், ஆயத்த நிலை (ம) திறன் மேம்பாடு ஆகியவற்றிலிருந்து சீரமைப்பு பணிகளுக்காக நிதியை பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்ய வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் குறிப்பிட்டார்.

# நீலகிரி மாவட்ட துறை அதிகாரிகளுடன் ஆய்வு!

### அமைச்சர் கா.ராமச்சந்திரன் மேற்கொண்டார்!

நீலகிரி, ஜூன்.15-

நீலகிரி மாவட்டம் உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், கூட்டுறவுத்துறை, பொது விநியோக திட்டம், தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண் வணிகத்துறை உள்ளிட்ட துறை அலுவலர் களுடனான ஆய்வுக் கூட்டம், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சா.ப.அம்ரித் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில், சுற்றுலாத்துறை அமைச்சர், பொதுவிநியோகம் திட்டத்தின் கீழ், மாவட்டத்தில் உள்ள நியாய விலைக்கடைகள், அத்தியாவசிய பொருட்களின் நகர்வு மற்றும் நுகர்வு விவரம், புதிய நகரும் நியாய விலை கடைகள், புதிய பகுதி நியாய விலைக் கடைகள் அமைத்தலின் தற்போதைய நிலை, கூட்டுறவு சங்கங்களின் மூலம் நடத்தப்படும் நியாய விலைக்கடைகளில் பழுதடைந்த/சரி செய்யப்படும் நியாய விலைக்கடைகளின் விவரம், நகல் குடும்ப அட்டை கோரிய மனுக்கள் நிலுவை விவரம், குடும்ப அட்டை மாற்றம் கோரிய மனுக்கள் நிலுவை விவரம், கைவிரல் ரேகை பதிவு, அங்கீகாரச் சான்று வழங்கப்பட்ட விவரம், வட்ட வழங்கல் அலுவலர்களின் நியாய விலைக்கடை தணிக்கை விவரம், கூட்டுறவு துறையின் மூலம் பயிர்காப்பீடு திட்டம், சுய உதவிக்குழு கடனுதவி, நகைக்கடன், தோட்டக்கலைத்துறையின் மூலம் பயிர்சாகுபடி விவரம் 2021-2022, 2022-2023 ஆகிய ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட வளர்ச்சி திட்ட இயக்கம், நுண்ணீர் பாசனம், அட்மா திட்டம், நீலமலையில் அங்கக வேளாண்மை உள்ளிட்டவைகள் குறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இதுகுறித்து சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள், பொதுமக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்குவதில் முக்கிய பங்காற்றி வரும் பொது விநியோகத் திட்டத்தினை வலுப்படுத்துவதின் மூலம் ஏழை, எளிய மக்களுக்கு நேரடியாக உதவ முடியும் என்பதின் அடிப்படையில் நியாய விலைக்கடைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, தமிழகத்திலுள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ், விலையில்லா அரிசி வழங்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கூட்டுறவுத்துறை அமைச்சர் மற்றும் உணவுத்துறை அமைச்சர் ஆகியோர், அரிசிக்கு பதிலாக 2 கிலோ ராகி வழங்கும் திட்டத்தினை பரீட்சார்த்தமாக நீலகிரி மாவட்டத்தில் தொடங்கி வைத்தார்கள்.

ராகி நார்ச்சத்து, இரும்பு மற்றும் கால்சியம் போன்ற ஊட்டச் சத்துகளின் ஆற்றல் மையமாக இருக்கின்றது. சிறுதானியங்கள் குறைந்த கிளைசெமிக் குறியீட்டை கொண்டுள்ளதால், நீரிழிவு நோய்க்கு எதிரான போராட்டத்தில் சிறந்த தற்காப்பு கருவியாக உள்ளது. எனவே பொதுமக்களிடம் ராகியை வாங்கி பயன்படுத்தும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். வட்ட வழங்கல் அலுவலர்கள் மாதா மாதம் நியாயவிலைக்கடைகளில் ஆய்வு மேற்கொண்டு பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்து பரிசோதிக்க வேண்டும். முதல் வரும் கோதுமை, அரிசி, ராகி, சர்க்கரை போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகித்த பின்னரே மூட்டைகளில் அடுத்தடுத்து வரும் பொருட்களை விநியோகிக்க வேண்டும். நியாயவிலைக்கடையினை சுத்தமாகவும், மழையினால் பாதிக்கப்படாத வகையில் அத்தியாவசிய பொருட்கள் பாதுகாப்பாக பத்திரப்படுத்தி வைக்க வேண்டும். பொதுமக்களுக்கு வழங்கும் பொருட்கள் தரமாக இருக்க வேண்டும். விற்பனையாளர்கள் கடை திறக்கும் நேரம் மற்றும் மூடும் நேரம், இருப்புப் பொருட்களின் பட்டியல் பலகை பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் வைக்க வேண்டும்.

மேலும், கூட்டுறவு. சங்கமானது ஏழை, எளியோர்களுக்காக உருவாக்கப்பட்ட சங்கமாகும். கூட்டுறவு சங்கங்களில் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பராபட்சம் பார்க்காமல் தகுதி வாய்ந்த விவசாயிகளுக்கு பயிர் கடன், நகைக் கடன் மற்றும் தேவையான அனைத்து வசதிகளையும் குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் செய்து தர வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

நீலகிரி மாவட்டத்தில் மொத்தம் 404 நியாய விலைக்கடைகள் செயல்பட்டு வருகின்றன. குந்தா வட்டத்தில் உள்ள 33 நியாய விலை கடைகளுக்கும் பரிட்சார்த்த முறையில் (QR கோடு இணைக்கப்பட்ட துவரம் பருப்பு மூட்டைகள் அனுப்பும் திட்டம் கடந்த செப்டம்பர் 2022 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நுகர்பொருள் வாணிப கழக பண்டகசாலையில் இருந்து அனுப்பப்படும் பொருட்கள் நேராக நியாயவிலைக்கடைகளுக்கு கொண்டு செல்லப்படுகிறா அல்லது வேறு எங்காவது செல்கிறதா என்பதை கண்டறிவதற்கு இத்திட்டம் உதவுகிறது.

மூட்டைகளில் வரும் அத்தியாவசிய பொருட்களை எது முதலில் வந்தது என்பதனை எளிதில் தெரிந்து கொள்ளும் வகையில் கலர் நூல் மூலம் அடையாளம் காணப்படுகிறது. இத்திட்டம் நீலகிரி மாவட்டத்திலுள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் அனுப்பப்படும் அரிசி, துவரம் பருப்பு மற்றும் கோதுமை உள்ளிட்ட மூட்டைகளிலும் நடைமுறைப் படுத்தப்பட உள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் 65 நியாய விலைகடைகளுக்கு டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை மூலம் பணம் செலுத்தும் திட்டம் நடைமுறையில் உள்ளது. கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு கடனுதவிகள், சுய உதவி குழுக்களுக்கு கடன், நகைக்கடன் போன்றவை எவ்வளவு வழங்கப்பட்டுள்ளது என ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ராகி வழங்கும் திட்டம் மிக சிறப்பாக நமது மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொடர்ந்து இது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் பொது மக்களுக்கு நல்ல தரமான அரிசி, கோதுமை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதை அலுவலர்கள் கண்காணித்து உறுதி செய்திட வேண்டும். தென்மேற்கு பருவமழையை முன்னிட்டு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அனைத்து முன்னேற்பாடு பணிகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷணகுமார், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் கருப்புச்சாமி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிய கழக மண்டல மேலாளர் முருகானந்தம், செயற்பொறியாளர் (வேளாண் பொறியியல் துறை) ராதாகிருஷ்ணன், தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திருமதி. ஷிபிலாமேரி, துணைப்பதிவாளர் (பொது விநியோக திட்டம்) மிர்ஹகள் முகபர் இம்தியாளம், துணை இயக்குநர் (வேளாண் வணிகத் துறை) கிருஷ்ணமூர்த்தி, வட்ட வழங்கல் அலுவலர்கள் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் எம்.ஏ.நகர் மார்க்கெட் அருகில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து கழகக் கொடியேற்றி, துப்புறவுப் பணியாளர்களுக்கு சீருடை மற்றும் அரிசி, காய்கறிகளும், 500 ஏழை எளியோர்களுக்கு வேட்டி, சேலை மற்றும் 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இதில் ஒன்றிய நிர்வாகிகள் மாவட்ட, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் கிளைகழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை சோழவரம் ஒன்றியச் செயலாளர் மீ.வே.கர்ணாகரன் சிறப்பாக ஏற்பாடு செய்தார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மழைநீர் வடிகால் துறை**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

ம.நீ.வ.து.ந.க.எண்.பி3/1572-3/2023

**இரு உறை குறுகிய கால முறையில் மின்னணு மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு**

| வ. எண் | கோப்பு எண் மற்றும் பணியின் விவரம் | பணியின் அலுவலக மதிப்பு 18% வரி உட்பட (ரூபாய் இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை | ஒப்பத்திற்கான தகுதியுள்ள வகுப்பு |
|---|---|---|---|---|
| 1 | ம.நீ.வ.து.ந.க.எண்.பி3/1572-3/2023 மண்டலம் - 15, வார்டு-195 உள்ள பெரிய சத்திர குளம் மேம்படுத்தி புனரமைக்கும் அமைக்கும் பணி சிப்பம்-3 | ரூ. 90.08 | பணியின் அலுவலக மதிப்பில் 1% | வகுப்பு - 1 |

1. நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் 26.06.2023 மாலை 3.00 மணி
2. ஒப்பந்தப்புள்ளிகளை சமர்ப்பிக்க வேண்டிய வலைதளம் https://tntenders.gov.in
3. ஒப்பம் திறக்கும் நாள் மற்றும் நேரம் 27.06.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 3042 / ஒப்பந்தப்புள்ளி / 2023

கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம்-1**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

ம.அ1.ந.க.எண் பி2/875/2023 — மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு

கீழ்காணும் பணிக்கு மண்டல அலுவலர்-1 அவர்களால் கோரப்படுகிறது

மண்டலம்-1, 2023-24 ஆம் ஆண்டு GRANTS FUNDன் (NULM) கீழ் பகுதி -1, வார்டு எண் 1 (ம) 2 புதியதாக இரவு காப்பகம் கட்டும் பணி

| | |
|---|---|
| தாழங்குப்பத்தில் உள்ள புயல் பாதுகாப்பு மைய இரவு காப்பகத்தின் எதிரில் கட்டும் புதிய இரவு காப்பகம் கட்டும் பணியின் முன்வைப்பு தொகை ரூ.60000/- (தகுதிவாய்ந்த முன் அனுபவம் பெற்ற நிறுவனம்) | காந்தி மார்க்கெட்டில் புதியததாக இரவு காப்பகம் கட்டும் பணியின் முன்வைப்பு தொகை ரூ 60000/- (தகுதிவாய்ந்த முன் அனுபவம் பெற்ற நிறுவனம்) |

மேலும் விவரங்களுக்கு http://tntenders.gov.in இணைய தளத்தின் மூலம் விவரங்கள் தெரிந்து கொண்டு மின் ஒப்பத்தில் கலந்து கொள்ளலாம்

ஒப்பம் சமர்ப்பிக்கும் நாள் : 29.06.2023 அன்று பிற்பகல் 3.00 மணி வரை

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 30.06.2023 பிற்பகல் 3.30 மணி

மேலும் விவரங்களுக்கு http://tntenders.gov.in

மண்டல அலுவலர் 1

செ.ம.தொ.இ / 3024 / ஒப்பந்தப்புள்ளி / 2023

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**இயந்திர பொறியியல் துறை**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

இ.பொ.து.ஆ.வா.ப.ந.க.எண்.சடி5/122/2023 — குறுகிய கால மின்னணு ஒப்பம்

கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (ம.நீ.வது & இயந்திரம்) அவர்களால் மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது. (ஒப்ப விதிகளின்படி)

| கோப்பு எண் | பணியின் விவரம் | முன் வைப்பு தொகை |
|---|---|---|
| டி5/ 122 / 2023 | பெருநகர சென்னை மாநகராட்சி, ஆய்வு வாகனப் பணிமனைக்கு 365 நாட்களுக்கு 08 ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவது | ரூ.30,000/- |

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 22.06.2023 மதியம் 3.00 மணி
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 23.06.2023 மதியம் 3.30 மணி
மேலும் விபரங்களுக்கு : http://tntenders.gov.in

செ.ம.தொ.இ / 3043 / ஒப்பந்தப்புள்ளி / 2023

மேற்பார்வை பொறியாளர் (ம.நீ.வது & இயந்திரம்)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

பே.சா.து.ந.க.எண்.பி4/1184/2023 — மின்னணு மறு ஒப்பந்தபுள்ளி கோரும் அறிக்கை

கீழ்கண்ட பணிகளுக்கு குறுகிய கால மின்னணு மறு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது.

நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT Scheme) - 2022-23

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோரயமாக 18% (GST சேர்த்து ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| மண்டலம் - 10 & 11ல் உள்ள 15 எண்ணிக்கையிலான உட்புற சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் மேம்படுத்தும் பணி சிப்பம் மற்றும் முதல் அதிகபட்ச 9 மற்றும் 20 (நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்) NSMT Scheme 2022-23 | 9 மற்றும் 20 | குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.87.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.97.00 இலட்சங்கள் | பணியின் மதிப்பில் 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 27.06.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 28.06.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 3026 / ஒப்பந்தப்புள்ளி / 2023

மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்



**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

பே.சா.து.ந.க.எண்.பி4/1183/2023 — மின்னணு மறு ஒப்பந்தபுள்ளி கோரும் அறிக்கை

கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு மறு ஒப்பம் இரண்டு உறை முறையில்

நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (NSMT Scheme) - 2023-24

| பணியின் விவரம் | சிப்பம் | பணியின் மதிப்பு தோரயமாக 18% (GST சேர்த்து ரூ.இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| மண்டலம் 11ல் உள்ள 45 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளில் தார் சாலை, மேம்படுத்தும் பணி (சிப்பம் 34 மற்றும் 36) (நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்) (NSMT Scheme) | 34 மற்றும் 36 | குறைந்தபட்ச பணியின் மதிப்பு ரூ.112.00 இலட்சம் முதல் அதிகபட்ச பணியின் மதிப்பு ரூ.150.00 இலட்சங்கள் | பணியின் மதிப்பில் 1 சதவீதம் | முதல் வகுப்பு |

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 27.06.2023 மாலை 3.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக்கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 28.06.2023 மாலை 3.30 மணி

செ.ம.தொ.இ / 3025 / ஒப்பந்தப்புள்ளி / 2023

மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து)

சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்